# வாழ்விக்கும் வைணவம்

ஸ்ரீவைஷ்ணவச் சுடராழி **டி.ஏ.ஜோசப்**, பாண்டிச்சேரி
18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011
Phone: 0413-2210187 Web: www.dajoseph.50megs.com Email: deyeje@yahoo.com

முழு இந்தியாவும் இன்று ராம நாமத்தை உச்சரித்துக்கொண்டு இருக்கிறது. ராமர் பாலம் சர்ச்சையினால் வந்த நன்மை இது. ராமனை வெறுக்கிறவர்கள் கூட ராமர்பாலம் என்ற கூறும் போது தம்மையும் அறியாமல் ராமன் பெயரைக் சொல்லுகிறார்கள். சகஸ்ர நாமங்களுக்கும் சமமான இந்த ராமநாமம் இப்படி எல்லோராலும் அனுஸந்திக்கப் படுவதற்கு சேது சமுத்திர சர்ச்சைதான் காரணம் என்றால் இந்த சர்ச்சை சிலகாலம் நீடிக்கட்டுமே என்று நினைக்கத் தூண்டுகிறது.

இது இருக்கட்டும், குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பதே சிலருக்கு வேலையாகிப் போய்விட்டது. பாலத்தை இடிப்பதா வேண்டாமா என்கிற சந்தடியின் நடுவே இதுதான் சமயம் என்று ஒருவர் ராமர் கடவுளே இல்லை என்ற அறிக்கை விட்டிருக்கிறார். தன் கூற்றுக்கு ஆதாரமாக அந்த வேதமேதை ராமாயண சுலோகத்தை மேற்கோளும் காட்டி இருக்கிறார்.(30.9.07 ஜூனியர் விகடன் பக்கம் 38)

"ஆத்மாநம் மானுஷம் மன்யே ராமம் தசரதாத்மஜம்....." என்கிற பகுதி, தன்னைப் பார்த்து இறைவன் என்று புகழ்ந்த தேவர்களிடம் ராமன் சொன்னது. நான் இறைவன் இல்லை; என்னை தசரதனுடைய மகனாக, ராமனாக, ஒரு சாதாரண மனிதனாகத்தான் இந்த அவதாரத்தில் நினைக்கிறேன் என்று ராமன் மறுத்துப் பேசுகிறான். தேவர்களுடைய கூற்று ஒருபுறம், ராமனுடைய கூற்று ஒரு புறம், என்ற இரு கூற்றுகளையும் தனித்தனியே சீர்தூக்கிப் பார்த்துவிட்டு இந்த வேதமேதை ராமன் சொன்னதே சரி, தேவர்கள் சொன்னது தவறு என்கிறார். அதாவது ஒருவனை, பகவானுடைய அவதாரமா அல்லது சாராரண மனிதனா என்று கூட பேதம் பார்க்க முடியாத மடையர்களாக தேவர்கள் இருக்கிறார்கள் என்கிறார். அப்படியானால் இந்த மடையர்களை, படைக்கப்பட்ட உலகங்களுக்கு அதிகாரபுருஷர்களாகவும் முப்பத்து முக்கோடி தேவர்களாகவும், இந்துமதம் ஏன் சிலாகித்து சொல்லவேண்டும்? இந்தக் கேள்விக்கு பதில் தேவை. கோடான கோடி மனிதர்களை ஆட்டி வைக்கும் இந்த தேவர்களுக்கு மனிதன் யார் பகவான் யார் என்ற கூட கண்டுபிடிக்கத் தெரியாதா?

நம்நாட்டு ஜனாதிபதிகளும், முதன் மந்திகளும் நீலகிரி, முதுமலை போன்ற மலைப்பிரதேசங்களில் வாழும் பழங்குடி மக்களைச் சந்திக்கும்போது அவர்களோடு சேர்ந்து ஆடிப்பாடுவது உண்டு. இதைப்பல புகைப்படங்களிலும், செய்தி, திரைப்படச் சுருள்களிலும் பார்த்திருக்கிறறோம். அந்த ஆதிவாசிகளோடு ஆடும்போது நாங்களும்

உங்களில் ஒருவர்தான். எங்களை உங்கள் இனத்தவராகவே கருதுகிறோம்'', என்று சொல்வதுண்டு. 'நான் ஒரு ஆதிவாசி' என்பதற்கும், ''நான் என்னை ஒரு ஆதிவாசியாகக் கருதுகிறேன்'' என்பதற்கும் நிறைய வேறுபாடு உண்டு.

இல்லாத ஒன்றை இருப்பதாகச் சொல்லும்போது கருதுகிறேன் என்ற சொல்லே பயன்படுத்துவதுண்டு, உதாரணமாக 'கல் விக்ரஹத்தை கடவுளாகவே கருதுகிறோம்', 'இந்தக் கதராடையை பொன்னாடையாகக் கருதுகிறோம்', 'பொன் வைக்க வேண்டிய இடத்தில் இந்தப் பூவை வைத்து இதைப் பொன்னாகக் கருதி அளிக்கிறோம்' என்று வரும் வாக்கியங்களில் இந்தப் பொருள் புலனாகும். ராமனும் அப்படித்தான் சொன்னான். 'மந்யே' என்ற ஸம்ஸ்கிருதச் சொல்லுக்கு இங்கே அதுதான் பொருள். இந்த அடிப்படை இலக்கணம் கூட அந்த மேதைக்குத் தெரியவில்லையா?

ஸ்ரீவைகுண்டத்தில் நித்யசூரிகளால் போற்றப்படும் பகவனாக வாழ்வதைவிட பூமியில் தன் அன்பர்கள் மத்தியில் மனிதரோடு மனிதனாக வாழ்வதை எம்பெருமான் மிகவும் ரஸிக்கிறான். விரும்புகிறான். கிருஷ்ணாவதாரத்தில் கண்ணன் கோவர்த்தன கிரியை தூக்கிப் பிடிப்பதைப் பார்த்து யாதவர்கள் ''நீ தேவனோ பூதமோ'' என்ற அஞ்சிப் புலம்பியபோது, ''இல்லை இல்லை நான் யசோதையின் மகன், நந்தகோபன்குமரன். உங்கள் உறவினன், சாதாரண யாதவன்,'' என்று சொல்லிக் கொண்டான். தன் அன்பரால் வணங்கப்படும் இறைநிலை அந்தஸ்தைவிட, அவர்களுக்கு நண்பனாய், தொண்டனாய் இருப்பதையே பகவான் விரும்புகிறான். இது அவனோடு என்றும் உறைகிற இறைமைக் குணம். சௌலப்யம் என்றும் சௌசீல்யம் என்றும் இதை புகழ்ந்து சொல்வார்கள். இப்படி அவன் பேசுகிறான் என்பதற்காக அவன் கடவுள் இல்லை என்று ஆகிவிடுமா? அவனை யாதவன் என்ற நாம் நினைக்கலாமா? இப்படியெல்லாம் வக்ரமாக பொருள் கொண்டால் இந்துமதம் சின்னாபின்ன மாகிக் கேலி கூத்தாகிவிடுமே, இதை யெல்லாம் அந்த வேதமேதை உணர்கிறாரா? அல்லது உணராதது போல் நடிக்கிறாரா?

ராமனை மட்டமாகப் பேசுவது மல்லாந்து படுத்துக்கொண்டு வான்நோக்கி உமிழ்வதற்குச் சமம். எச்சில் நம் மார்பு மீதுதான் விழும். இந்தியாவின் கௌரவம் ராமனால் நமக்கு ஏற்பட்ட கௌரவம். ராமாயணம் என்ற காவியம் இந்தியர் களுக்கு உலக அரங்கில் எவ்வளவு பெரிய மதிப்பை சம்பாதித்து கொடுத்திருக்கிறது என்பதை இன்று ராமதூஷணம் செய்கிறவர்கள் உணர்வதில்லை. ஹரே ராமா, ஹரே கிருஷ்ணா என்று வெள்ளையர்கள் ஏன் சங்கீர்த்தனம் செய்யத் தொடங்கினார்கள்? ராமனுடைய பண்புகளைப்பற்றி அவர்கள் படித்தபோது அவர்களுடைய நாட்டு மஹான்களிடமும் தங்கள் தெய்வங்களிடமும் இல்லாத குணங்களை ராமனிடமும், கண்ணனிடமும், பார்த்ததால்தானே அவர்கள் அப்படி மாறினார்கள் !

'ராமன்' என்பதை ஒரு கற்பனைக் கதாபாத்திரமாக வைத்துக்கொண்டால்கூட இப்படி ஒரு காவியமாக அதனைப் படைத்து அந்த இதிகாசத்தை கொண்டாடும் ஒரு

சமுதாயம் எவ்வளவு பண்பட்ட சமுதாயமாக இருந்தால் மட்டுமே அது சாத்யம் என்பதை இன்றைய பகவத்துவேஷிகள் சிந்திக்கட்டும்.

ராமன் மது அருந்தினான் என்று ராமாயணம் கூறுகிறது என்கிறார். ஆனால் அது எந்த விதமாகக் கூறப்பட்டிருக்கிறது? சீதையிடம் பேசும் அனுமன், "தேவி! தங்களைப்பிரிந்த சோகத்தால் ராமன் மதுவைக்கூட அருந்துவதில்லை" என்று கூறுகிறான். இதிலே ராமன் ஒரு உத்தம கணவனாக சித்தரிக்கப்படுகிறான். மனைவியைப் பிரிந்த சோகத்தால் மதுவையும் அருந்துவதிலை என்றுதான் ராமாயணம் கூறுகிறது. அருந்தவில்லை என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறதே தவிர குடித்துக் கெட்டான் என்று சொல்லப் படவில்லை. காதலியைப் பிரிந்த சோகத்தினால் பாட்டில் பாட்டிலாகக் குடித்துவிட்டு போதையில் கதாநாயகன் உருகுகிறான் என்ற சினிமாவுக்குக் கதை அமைக்கிறவர்களும், சினிமா எடுத்தே சிம்மாசனத்தைப்பிடித்தவர்களும் இந்த இடத்தில் சிந்திக்க வேண்டும். சோகமும் ராமனை மதுவைக் கைவிடும்படித்தான் செய்தது.

எப்படியோ முன்னொரு காலத்தில் குடித்தான் என்றாவது சொல்லப் பட்டிருக்கிறதல்லவா? என்று கேட்கிறார்கள் வக்ரமாய் பேசும் கொக்கரிப்பாளர்கள். ராமன் க்ஷத்ரிய வர்ணத்தில் பிறந்தான். அந்த வர்ணத்துக்குரிய உணவு, உடை, வாழ்க்கை முறை, முதலியவற்றைக் கடைபிடித்தான். அவன் வராஹ அவதாரம் எடுத்தபோது பன்றிபோல் கிழங்குகளைத் தின்னைவில்லையா? நரசிம்மமாய் அவதரித்தபோது இரண்யனின் ரத்தத்தை உறிஞ்சிக் குடிக்கவில்லையா? அதுபோல இதுவும். நாய் வேஷம் போட்டால் குரைக்க வேண்டும். நரி வேஷம் போட்டால் ஊளையிடவேண்டும். ராம நாடகத்தின் பின்னணித் தத்துவம் இதுதான்.

இதைப்புரிந்து கொள்ளாமல் இந்தியர்க்கு அகில உலக அந்தஸ்தை அள்ளித்தரும் ஒரு இதிகாசத்தை அவமானப்படுத்துவது அறியாமை. குடிக்கிறவன் என்பதற்கும், குடிகாரன் என்பதற்கும் வேறுபாடு உண்டு வார்த்தைகள் பிறழ்ந்து போனால் பொருள் மாற்றம் என்பதைவிட, அதனால் சமூகத்தில் ஏற்படும் பாதிப்பைப்பற்றித்தான் சிந்திக்க வேண்டும். குட்டக்குட்டக் குனியும் தமிழ்நாட்டு ஆத்திக சமுதாயம் கடவுளை வணங்குவன் காட்டுமிராண்டி என்ற வாக்கியத்தைக் காலத்தின் கோலமாக எண்ணி காணாக்கண்ணிட்டுப் புறக்கணித்தது. ஆனால் உயர் குணங்களின் உறைவிடமாக, முழுநாகரீகத்தின் முன்னோடியாக, எத்தனையோ இதயங்களின் எண்ண விளக்காக, ஒளிரும் ஸ்ரீராம சந்திரனைப் பற்றி அவதூறான சொற்கள் வழங்கப்பட்டால் இது சாந்த மூர்த்திகளையும் உக்ர சிங்கங்களாக மாற்றிவிடும் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அடித்தால் பொறுத்துக் கொள்ளலாம், கடித்தால் சும்மா இருக்க முடியுமா?